# உலகிலும் பெரிது தமிழீழம் ...

உலகிலும் பெரிது தமிழீழம்

உலகே இதை உனக்கு உணர்த்தும் எதிர்காலம்

அன்னை மண் உயிர் வாழும் நெஞ்சினார் நாடு

அருந்தமிழ் நிலம் வாழ நஞ்சுண்பார் நாடு

இன்னுயிர் மாவீரர் உயிர்க்கொடைநாடு

இனியதாய் மண்காக்கும் புலிப்படை நாடு

– உலகிலும் பெரிது தமிழீழம்

தாயிலும் தாய் மண்ணே மேலென்று சொல்வோம்

தமிழீழப் போரெனில் உடன் களம் செல்வோம்

ஆயிரம் இடி மின்னல் நெருப்பாகி வெடிப்போம்

அன்னை மண் அழிப்பானை முடிப்போம் முடிப்போம்

– உலகிலும் பெரிது தமிழீழம்

உரிமைப்போர் எங்கள் மண்ணில் எவன் வந்து தடுப்பான்

உலகமே தடுத்தாலும் தமிழன் போர் தொடுப்பான்

எரிமலை கருப்பையில் தமிழ் வேங்கை பிறப்பான்

எதிரி ஒரு நொடியில் களம் விட்டுப் பறப்பான்

– உலகிலும் பெரிது தமிழீழம்